அறிவிக்கை எண்.02/2020 /மாஆசேநி நாள் : 19.06.2020

## மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையம் – தருமபுரி மாவட்டம்
## கூட்டுறவுச்சங்கங்களின் இணைப்பதிவாளர் அலுவலகம்,
## கூட்டுறவு அலுவலக வளாகம்,
## மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், தருமபுரி – 636 705.

தருமபுரி மாவட்டத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் நடத்தப்படும் பொது விநியோகத் திட்ட நியாயவிலைக் கடைகளுக்கு கீழே கண்டுள்ள பட்டியலில் கலம் (3)–ல் கண்டுள்ள கூட்டுறவு நிறுவனத்திற்கு கலம் (4)–ல் குறிப்பிடப்பட்டுள்ள நியாயவிலைக் கடை விற்பனையாளர் காலிப்பணியிடங்களுக்கு நேர்முகத் தேர்வின் மூலம் நேரடி நியமனம் செய்வதற்கு 18.07.2020 (சனிக்கிழமை) மாலை 5.45 மணி வரை விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| வ. எண். | பதவியின் பெயர் | கூட்டுறவு நிறுவனத்தின் பெயர் | காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை | பணியிடத்திற்கான சம்பள விகிதம் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | நியாய விலைக்கடை விற்பனையாளர் | **1) தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள்** | | 1. நியமன நாளிலிருந்து ஓராண்டு வரை தொகுப்பு ஊதியம் ரூ. 5000/-<br>2. ஓராண்டுக்குப் பிறகு ஊதிய விகிதம் ரூ. 4300-12000/- |
| | | 1. நடுஅள்ளி | 01 | |
| | | 2. ஒட்ட அள்ளி | 01 | |
| | | 3. கடகத்தூர் | 01 | |
| | | 4. பாகலஅள்ளி | 01 | |
| | | 5. பென்னாகரம் | 02 | |
| | | 6. கடமடை | 01 | |
| | | 7. நெருப்பூர் | 01 | |
| | | 8. ஆதனூர் | 01 | |
| | | 9. ஓ.ஜி.அள்ளி | 01 | |
| | | 10. பாப்பாரப்பட்டி சிவா | 02 | |
| | | 11. மாரண்டஅள்ளி | 01 | |
| | | 12. சாமனூர் | 01 | |
| | | 13. பாலக்கோடு | 01 | |
| | | 14. காரிமங்கலம் | 01 | |
| | | 15. பாப்பிநாய்க்கன அள்ளி | 01 | |
| | | 16. பெரியானஅள்ளி | 01 | |
| | | 17. கொளகம்பட்டி | 01 | |
| | | 18. மொரப்பூர் | 02 | |
| | | 19. கெலவள்ளி | 02 | |

| வ. எண். | பதவியின் பெயர் | கூட்டுறவு நிறுவனத்தின் பெயர் | காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை | பணியிடத்திற்கான சம்பள விகிதம் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | 20. சின்னாகவுண்டம்பட்டி | 04 | |
| | | 21. எலவடை | 01 | |
| | | 22. கொங்கரப்பட்டி | 01 | |
| | | 23. இருமத்தூர் | 02 | |
| | | 24. சந்தப்பட்டி | 02 | |
| | | 25. பொன்னேரி | 01 | |
| | | 26. பாப்பிரெட்டிப்பட்டி | 01 | |
| | | 27. மோளையானூர் | 02 | |
| | | 28. பையர்நத்தம் | 02 | |
| | | 29. ஜம்மனஅள்ளி | 01 | |
| | | 30. கடத்தூர் | 03 | |
| | | 31. பொ.மல்லாபுரம் | 01 | |
| | | 32. தாளநத்தம் | 02 | |
| | | 33. புளியம்பட்டி | 01 | |
| | | 34. சிந்தல்பாடி | 01 | |
| | | **2) இதர வகை சங்கம் :** தருமபுரி மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை லிட்., | 03 | |
| | | **மொத்தம்** | **51** | |

## 2. காலிப்பணியிடங்களுக்கான வகுப்பு வாரி பகிர்மானப் பட்டியல் :-

| பதவி | மொத்த காலிப் பணியிடம் | வகுப்பு வாரி இட ஒதுக்கீடு | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | பொது (GT) | பிற்படுத்தப் பட்டோர் (BC) | பிற்படுத்தப் பட்டோர் (இஸ்லாமியர்) (BCM) | மிகவும் பிற்படுத்தப் பட்டோர் / சீர்மரபினர் (MBC/DC) | ஆதி திராவி டர் (SC) | ஆதி திராவிடர் (அருந்ததியர்) SC(A) | பழங்கு டியினர் (ST) |
| நியாய விலைக் கடை விற்பனை யாளர் | 51 | 15 | 14 | 2 | 10 | 7 | 2 | 1 |

<u>குறிப்பு :–</u> மதிப்பிடப்பட்டுள்ள காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை தற்காலிகமானதும் மாற்றத்திற்கும் மற்றும் சேர்த்தலுக்கும் உட்பட்டது.

**<u>நிபந்தனைகள்:-</u>**

1. மேற்படி பதவிகளுக்கான நேரடி நியமனத்தின் போது அரசு பணியாளர்கள் தேர்வுக்குப் பின்பற்றப்படும் இட ஒதுக்கீடு மற்றும் இன சுழற்சி முறை ஒட்டு மொத்த நியமனத்திற்கும் பின்பற்றப்படும்.

2. நியமனத்தின்போது தகுதியான பெண் விண்ணப்பதாரர்கள் போதுமான அளவு இல்லாதபோது பெண்களுக்கான ஒதுக்கீடு எண்ணிக்கையைத் தகுதி வாய்ந்த அதே வகுப்பினைச் சார்ந்த ஆண்களைக் கொண்டு நிரப்பப்படும்.

3. ஆதரவற்ற விதவைகள், மாற்றுத் திறனாளிகள் (கண் பார்வையற்றோர் தவிர) தமிழ்வழிக் கல்வி பயின்றோர் மற்றும் முன்னாள் ராணுவத்தினர் ஆகியோருக்கு ஒதுக்கப்பட்ட இடங்கள், இந்த நியமனத்தின்போதும் பின்பற்றப்படும். தமிழ்வழிக் கல்வி பயின்றோர் என்பது இப்பதவிக்காக நிர்ணயிக்கப்பட்ட கல்வித்தகுதியை தமிழ் வழியில் (Tamil Medium) பயின்றவர் ஆவார்.

4. மேற்படி பணியிடங்களுக்கான தேர்வு குறித்து ஏதேனும் முறையீடு செய்வதாயின் இத்தேர்வு முடிவு வெளியிடப்பட்ட 90 நாட்களுக்குள் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தில் ஆட்சேபனைக்குரிய காரணங்களைக் குறிப்பிட்டு மேல் முறையீடு செய்யப்பட வேண்டும். அதற்குப் பின் பெறப்படும் முறையீடுகள் எதுவும் ஏற்கப்படமாட்டாது.

5. மாற்றுத் திறனாளிகளில் பார்வைத்திறனற்ற நபர்கள் விற்பனையாளர் பணியிடங்களுக்கு விண்ணப்பிக்க இயலாது.

## <u>3. முக்கியத் தேதிகள்:- (Important Dates)</u>

| | | | |
|---|---|---|---|
| அ) | விளம்பர அறிவிக்கை நாள் | - | 19.06.2020 |
| ஆ) | பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படுவதற்கான கடைசி நாள் | - | 18.07.2020.<br>மாலை 5.45 மணி வரை |

## <u>4. தகுதிகள்:-</u>

### அ. வயது (01.01.2020 அன்று)

விண்ணப்பதாரர்கள் 18 வயது பூர்த்தி அடைந்தவர்களாக இருக்க வேண்டும். (அதாவது 31.12.2001 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ பிறந்தவராக இருக்க வேண்டும்.)

| வ. எ. | விண்ணப்பதாரர்களின் இனவகைகள் | குறைந்தபட்ச வயது (முடிவடைந்திருக்க வேண்டும்) | அதிகபட்ச வயது |
|---|---|---|---|
| 1. | ஆதிதிராவிட வகுப்பினர், ஆதிதிராவிட வகுப்பினர் (அருந்ததியினர்), பழங்குடியின வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/ சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்) | 18 வயது | வயது வரம்பு இல்லை |
| ii) | இதர வகுப்பினர் | 18 வயது | 30 வயதுக்குள் |

## குறிப்பு :-

1) ஆதிதிராவிட வகுப்பினர், ஆதிதிராவிட வகுப்பினர் (அருந்ததியினர்), பழங்குடியின வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/ சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்) தவிர இதர வகுப்பினைச் சார்ந்த (Others) மாற்றுத்திறனாளிகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட வயது வரம்பிற்கு மேல் பத்தாண்டு வரை வயது வரம்புச் சலுகை பெற தகுதியுடையவராவார்கள்.
2) ஆதிதிராவிட வகுப்பினர், ஆதிதிராவிட வகுப்பினர் (அருந்ததியினர்), பழங்குடியின வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/ சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்) தவிர ஏனைய வகுப்பினை சார்ந்த முன்னாள் இராணுவத்தினருக்கு அரசாணையின்படி வயதுவரம்பு சலுகை வழங்கப்படும்.
3) ஏற்கனவே ஏதேனும் ஒரு பிரிவு/பணி/பதவிக்குத் தேர்ந்தடுக்கப்பட்ட முன்னாள் இராணுவத்தைச் சேர்ந்த விண்ணப்பதாரர் முன்னாள் இராணுவத்தினர் என்ற சலுகையைப் பெற முடியாது.
(தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி முறைமைகள்) சட்டம் 2016, பிரிவு3(i)(vii)

## ஆ. கல்வித் தகுதிகள்:- (Educational Qualification)

பொதுவிநியோகத்திட்ட நியாயவிலைக் கடை விற்பனையாளர்கள் : பன்னிரெண்டாம் வகுப்புத் தேர்ச்சி (+2 தேர்ச்சி) அல்லது அதற்கு இணையான கல்வித் தகுதியினைப் பெற்றிருக்க வேண்டும்.

## இ. தமிழ் மொழித் திறன்:-

விண்ணப்பதாரர்கள் இந்த அறிவிப்பு வெளியிடும் நாள் அன்று தமிழில் போதுமான அறிவு (Adequate Knowledge) உடையவர் என்பதற்கான எஸ்.எஸ்.எல்.சி (SSLC) அல்லது அதற்கு இணையான தேர்வுகளில் தமிழ்வழிக் கல்வியிலோ அல்லது தமிழை ஒரு பாடமாக எடுத்துப் படித்து தேர்ச்சி பெற்றதற்கான சான்றுகளைச் சமர்பிக்கவேண்டும்.

## ஈ. உடற்தகுதிச் சான்றிதழ்:- (Physical Fitness Certificate)

மேற்படி பதவிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் அரசு உதவி மருத்துவர் நிலைக்கு குறையாத மருத்துவரிடம் பெற்ற உடற்தகுதிச் சான்றிதழினைச் சமர்ப்பிக்க வேண்டும். மாற்றுத்திறனாளிகள் தங்களுடைய உடல் ஊனம் மேற்படி விற்பனையாளர் பணியினைச் செய்வதற்கு தடையாக இருக்காது என்பது குறித்து மருத்துவக் குழுமத்திடமிருந்து பெறப்பெற்ற சான்றிதழினையும் சமர்ப்பிக்க வேண்டும்.

## 5. தெரிவு முறை:- (Selection Procedure)

அ) மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் பெறப்படும் பட்டியல் மற்றும் இவ்விளம்பர அறிவிக்கை மூலம் விண்ணப்பித்த விண்ணப்பதாரர்கள் ஆகியோர்களில் தகுதி பெற்றவர்கள் நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்பட்டு, அவர்கள் நேர்முகத் தேர்வில் பெறும் மதிப்பெண்கள் அடிப்படையில் தரவரிசைப் பட்டியல் தயாரிக்கப்பட்டு, இட ஒதுக்கீடு மற்றும் இனசுழற்சி முறை ஆகியவை பின்பற்றப்பட்டு காலிப்பணியிடங்களின் எண்ணிக்கைக்கு உட்பட்டு பணியிடம் ஒதுக்கீடு செய்யப்படும்.

ஆ) நேர்முகத் தேர்வுக்கான அழைப்புக் கடிதம் விண்ணப்பதாரர்கள் அவர்களுடைய விண்ணப்ப படிவத்தில் குறிப்பிடப்பட்ட அஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும். நேர்முகத் தேர்விற்கு அழைப்புக் கடிதத்தில் குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்தில் விண்ணப்பதாரர்கள் அவர்களுடைய அனைத்து சான்றிதழ்களின் அசல் மற்றும் அவற்றின் சான்றளிக்கப்பட்ட நகல் ஒன்றுடன் தங்களின் சொந்த செலவில் தவறாமல் கலந்து கொள்ளவேண்டும்.

இ) நேர்முகத் தேர்விற்கு குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்தில் வருகை புரியாத விண்ணப்பதாரர்கள் எந்த நிலையிலும் இது தொடர்பாக எந்த உரிமையும் கோர இயலாது. நேர்முகத் தேர்வு அழைப்பாணை அனுப்பப்பட்டதை மட்டுமே காரணமாக வைத்து பணி நியமனம் கோர உரிமை ஏதும் கிடையாது.

ஈ) விண்ணப்பதாரர்கள், தங்கள் எந்த சங்கத்தின் நியாயவிலைக் கடைக்கு பணியமர்த்தப்பட வேண்டும் என்பதற்கான முதல் மூன்று சங்கங்களின் விருப்பத்தினை விண்ணப்பத்திலேயே தெரிவிக்க வேண்டும். விண்ணப்பதாரர்கள் முன்னுரிமை வரிசையில் அவர்கள் தெரிவித்திருந்த சங்கங்களுக்கு தேர்வு செய்யப்படுவதற்கு தேவையான மதிப்பெண், தரவரிசை, இடஒதுக்கீடு மற்றும் இனசுழற்சி தரவரிசை ஆகியவற்றை பெற்றிருக்காத நேர்வில் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தின் முடிவின்படி அவர்களுக்குப் பணியிடம் ஒதுக்கப்படும். இது தொடர்பாக மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தால் எடுக்கப்படும் முடிவே இறுதியானது. ஒதுக்கீடு செய்தபின்னர் அவ்ஒதுக்கீட்டை மாற்றக்கோரும் எந்தவொரு கோரிக்கையும் ஏற்க்கப்படமாட்டாது.

## 6. விண்ணப்பக் கட்டணம்:- (Application Fee)

நியாய விலைக்கடை விற்பனையாளர்கள் நியமனத்திற்கான விண்ணப்பப் பதிவுக் கட்டணம் ரூ.150/- ஆகும்.

## 7. கட்டண விலக்கு:-

ஆதிதிராவிடர், ஆதிதிராவிடர் (அருந்ததியினர்) பழங்குடியினர், அனைத்து வகுப்பை சார்ந்த மாற்றுத்திறனாளிகள் மற்றும் அனைத்து வகுப்பைச் சார்ந்த ஆதரவற்ற விதவைகள் ஆகியோருக்கு இந்த விண்ணப்பக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ள மாற்றுத்திறனாளிகள், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலரிடமிருந்து சான்றிதழும், மருத்துவ சான்றிதழும் பெற்றிருக்க வேண்டும். ஆதரவற்ற விதவைகள் வருவாய் கோட்ட அலுவலர் அல்லது உதவி/ சார் ஆட்சியரிடமிருந்து நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் சான்றிதழைப் பெற்று சமர்ப்பிக்க வேண்டும். ‘‘ஆதரவற்ற விதவை “ என்பது அனைத்து வழியிலிருந்தும் பெறும் மொத்த மாத வருமானம் ரூ.4,000/—க்கும் (ரூபாய் நான்காயிரம் மட்டும்) குறைவாகப் பெறுகின்ற ஒரு விதவையைக் குறிப்பதாகும். இவ்வருமானம், குடும்ப ஓய்வூதியம் அல்லது தொழிற்கல்வி பெற்றவர்களின் சுய தொழில் மூலம் ஈட்டும் வருமானம் உள்ளிட்ட மற்ற வருமானங்கள் ஆகியவற்றையும் உள்ளடக்கியதாகும். இத்தகைய விண்ணப்பதாரர்கள் உரிய வருவாய் கோட்ட அலுவலர் அல்லது உதவி/சார் ஆட்சியரிடமிருந்து நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் சான்றிதழைப் பெற்று சமர்ப்பிக்க வேண்டும். விவாகரத்து பெற்றவர், கணவனால் கைவிடப்பட்டவர் மற்றும் மறுமணம் புரிந்தவர் ஆதரவற்ற விதவையாகக் கருதப்பட மாட்டார்.

## 8. விண்ணப்பக் கட்டணம் செலுத்தும் முறை:-

மேற்படி விண்ணப்பக் கட்டணம் தருமபுரி மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் தலைமையகம் மற்றும் அதன் கிளைகள் அல்லது தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் (Nationalised Banks) **மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம், தருமபுரி மாவட்டம், (District Recruitment Bureau, Dharmapuri District. Payable at Dharmapuri)** என்ற பெயரில் வரைவோலையாக (Demand Draft) எடுக்கப்பட்டு, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் எண், மற்றும் விண்ணப்பிக்கப்படும் பதவிக்கான பெயர் மற்றும் விண்ணப்பதாரரின் பெயர் ஆகியவற்றை வரைவோலையின் பின்புறம் தவறாமல் எழுதப்பட வேண்டும்.

வரைவோலை இணைக்கப்படாத விண்ணப்பப் படிவங்கள் எவ்வித அறிவிப்புமின்றி நிராகரிக்கப்படும். ஒரு முறை செலுத்தப்பட்ட விண்ணப்பக் கட்டணம் எக்காரணம் கொண்டும், திருப்பி அளிக்கப்பட மாட்டாது.

## 9. தடையில்லாச சான்றிதழ்:- (No objection certificate)

விண்ணப்பதாரர்கள் ஏற்கனவே பணியாற்றுபவர்களாக (நிரந்தரமாகவோ, அல்லது தற்காலிகமாகவோ) இருக்கும்பட்சத்தில், அவர் பணியாற்றும் அலுவலகத்தில் இருந்து தடையில்லாச் சான்றிதழினைப் பெற்று நேர்முகத் தேர்வின்போது சமர்ப்பிக்க வேண்டும்.

## 10. விண்ணப் படிவங்கள் கிடைக்கும் இடங்கள் :-

பொதுவிநியோகத் திட்ட நியாயவிலைக் கடை விற்பனையாளர் பணி நியமனத்திற்கான விண்ணப்பப்படிவத்தை கீழ்க்கண்ட அலுவலகங்களில் / தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்க அலுவலகத்தில் அலுவலக வேலை நாட்களில், வேலை நேரத்தில் மட்டும் **இலவசமாகப்** பெற்றுக் கொள்ளலாம்.

1. துணைப்பதிவாளர் (பொவிதி) அலுவலகம்
   கூட்டுறவு அலுவலக வளாகம்,
   மாவட்ட ஆட்சியர் அலுவலகம் பின்புறம்,
   தருமபுரி – 636 705.
   தொலைபேசி எண்.04342 234 141.

2. கே.கே.348, தருமபுரி மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த
   விற்பனை பண்டகசாலை லிட்.,
   நெ.5/16ஏ, தருமபுரி மாவட்ட விவசாய சேவா கூட்டுறவு சங்க வளாகம்,
   செந்தில்நகர், தருமபுரி – 636 705.
   தொலைபேசி எண்.04342 – 231187, 230087.

3. எஸ்.121 அதியமான்கோட்டை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் லிட்.,
   அதியமான்கோட்டை அஞ்சல், நல்லம்பள்ளி வட்டம், தருமபுரி – 636 807.
   தொலைபேசி எண்.04342 244 002.

4. டி.டி.87 பாலக்கோடு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் லிட்.,
   கதவு எண்.6/225/3 தீர்த்தகிரி நகர், பாலக்கோடு வட்டம், தருமபுரி – 636 808.
   கைபேசி எண்.9789722001.

5. கே.கே.364 காரிமங்கலம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் லிட்.,
   அகரம் ரோடு, காரிமங்கலம் அஞ்சல், காரிமங்கலம் வட்டம், தருமபுரி – 635 111.
   தொலைபேசி எண்.04342 241 343.

6. கே.கே.146 பென்னாகரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் லிட்.,
   பென்னாகரம் பஸ்நிலையம் அருகில், பென்னாகரம் அஞ்சல்,
   பென்னாகரம் வட்டம், தருமபுரி – 636 810.
   கைபேசி எண்.9488386390.

7. கே.கே.323 பாப்பாரப்பட்டி சிவா தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு
   கடன் சங்கம் லிட்., பாப்பாரப்பட்டி அஞ்சல், பென்னாகரம் வட்டம் 636 809.
   தொலைபேசி எண்.04342 245 578.

8. கே.கே.151 அரூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு
   விற்பனை சங்கம் லிட்., சேலம் மெயின்ரோடு, அரூர் வட்டம்,
   தருமபுரி – 636 903.
   தொலைபேசி எண்.04346 222 028.

9. டி.டி.91 மொரப்பூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் லிட்.,
மொரப்பூர் அஞ்சல், அரூர் வட்டம்.
தொலைபேசி எண்.04346 263 470.

10. எஸ்.321 தீர்த்தமலை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் லிட்.,
பொய்யப்பட்டி கிராமம் மற்றும் அஞ்சல், அரூர் வட்டம்,
தருமபுரி – 636 906.
கைபேசி எண்.9788592278.

11. கே.கே. 198 நரிப்பள்ளி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் லிட்.,
நரிப்பள்ளி அஞ்சல், அரூர் வட்டம்,
தருமபுரி – 636 906.
கைபேசி எண்.94436 29209

12. எஸ்.335 பாப்பிரெட்டிப்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு
கடன் சங்கம் லிட்., பாப்பிரெட்டிப்பட்டி வட்டம் – 636 905.
தொலைபேசி எண்.04346 246 520.

13. 5830 பி.துரிஞ்சிப்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் லிட்.,
பாப்பிரெட்டிப்பட்டி வட்டம் – 635 301.
தொலைபேசி எண்.04346 244 506.

## 11. விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்ப வேண்டிய இணைப்புகள்:-

a) விண்ணப்பதாரர்கள் விண்ணப்பத்துடன் அனைத்து சான்றிதழ்களின் ஒளி நகல்களையே (Xerox copies) இணைத்து அனுப்ப வேண்டும். எக்காரணம் கொண்டும் அசல் சான்றிதழ்களை (Original Certificate) இணைத்து அனுப்பக்கூடாது.
b) சான்றிதழ்களின் நகல்கள் இணைக்கப்படாமல் அனுப்பப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.

## 12. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை பெறுதல் :-

விண்ணப்பதாரர்கள் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அனுப்புவதற்கு முன் கீழ்க்கண்டவற்றை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

1. விண்ணப்பப் படிவங்கள் நீலம் (அ) கருமைநிற பந்து முனை பேனா (Ball Point Pen) கொண்டு பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.
2. விண்ணப்பதாரரின் கையொப்பத்திற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் விண்ணப்பதாரர் கட்டாயம் கையொப்பம் இடப்பட்டிருக்க வேண்டும்.
3. கையொப்பம் இல்லாமல் பெறப்பட்ட விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
4. விண்ணப்பப் படிவத்தில் அனைத்து கலங்களும், இந்த விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட விவரங்களின் அடிப்படையில் முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

5. விண்ணப்பதாரர்கள் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கப்பட்டுள்ள நேர்முகத்தேர்வுக்கான அழைப்பு கடிதத்தில் (Interview call letter) பாஸ்போர்ட் அளவு புகைப்படம் ஒட்டி சுய விலாசம் எழுதி இணைத்து அனுப்பவேண்டும்.
6. விண்ணப்பதாரர் அவரின் பாஸ்போர்ட் அளவு புகைப்படம் ஒன்றை விண்ணப்பப்படிவத்தில் ஒட்டுவதுடன் சுய முகவரியிட்ட ரூ.25/–க்கான அஞ்சல் வில்லை ஒட்டிய 24X10 செ.மீ. உறையினையும் (Self Addressed cover) விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

## 13. இதர நிபந்தனைகள்:-

1. நேர்முகத் தேர்வில் கலந்துக் கொண்டு விண்ணப்பதாரர் சமர்ப்பித்த ஆவணங்களின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட அனைத்து தகுதிகளையும் பூர்த்தி செய்துள்ளார் என மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தால் தெரிவு செய்யப்பட்ட ஒரு விண்ணப்பதாரர் அப்பணிக்கென நிர்ணயிக்கப்பட்ட தகுதிகள் அனைத்தையும் முழுமையாக பெற்றிருக்க வில்லையென பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் அவரது தெரிவு மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தால் உடனடியாக இரத்து செய்யப்படும்.
2. காரணம் எதுவும் தெரிவிக்காமல் இந்த அறிவிக்கையினை இரத்து செய்வதற்கு / திரும்ப பெறுவதற்கு/ திருத்துவதற்கு மற்றும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பெறுவதற்கான தேதியை நீட்டிப்பதற்கு மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்திற்கு முழு உரிமையுண்டு.

## 14. பொது :-

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ பின்வரும் முகவரிக்கு **18.07.2020 அன்று மாலை 5.45 மணிக்கு முன்னர் கிடைக்குமாறு அனுப்பி வைக்க வேண்டும்.** மேற்குறிப்பிட்டுள்ள நாள் மற்றும் நேரத்திற்கு பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் எதுவும் எக்காரணம் கொண்டும் ஏற்கப்படமாட்டாது. அஞ்சல் தாமதத்திற்கான காரணங்களுக்கு மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம் எந்நேர்விலும் பொறுப்பு ஏற்காது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

**விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி**

மண்டல இணைப்பதிவாளர்/ தலைவர்,
மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம்,
கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர் அலுவலகம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், தருமபுரி – 636 705.

**மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையம்,**
**தருமபுரி மாவட்டம்.**